# புலிகள்-தொண்டமானின் குறிக்கோள் ஒன்றே

## ஹெலஉறுமய கூறுகிறது

(கொழும்பு)
வடக்கு-கிழக்கைப் போல் மலையகத்திலும் உத்தியோக பூர்வமற்ற விதத்தில் பிராந்திய அரசு தோன்றியுள்ளதாக 'ஹெல உறுமய' வின் இணைச் செயலர் திரு. திலக் (4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 12 இதழ் 199
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 28 — 08 — 1992

## தொண்டாவுக்கு எதிராக மீண்டும் இனத்துவேஷம்

(கொழும்பு)
தொண்டமானுக்கு எதிராக மீண்டும் இனத்துவேசம் பேசப்படுகின்றது என்று கொழும்பிலுள்ள அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. (4ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் இன்று மாபெரும் பேரணி

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராக நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட குற்றப் பிரேரணையின் ஓராண்டு பூர்த்தியை குறிக்குமுகமாக கொழும்பில் இன்று எதிர்க் (4ம் பக்கம் பார்க்க)

● மாதகல் பகுதியில்

# புலிகளுக்கும் ராணுவத்திற்கும் நேற்று கடும் போர் மூண்டது

## படைகளுக்கு பலத்த இழப்பு; 8 புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)
மாதகல் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினருக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் நேற்றுக்காலை பெரும்போர் மூண்டது. இச்சண்டையில் இராணுவ தரப்பில் பலர் கொல்லப்பட்டதாகவும் விடுதலைப்புலிகள் தரப்பில் எட்டுப்போராளிகள் வீரச்சாவு அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை மாதகல் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் உக்கிர தாக்குதலை தொடுத்தனர்.

சிலமணி நேரம் விடுதலைப் புலிகள் நடத்திய தீவிர தாக்குதலில் இராணுவதரப்பில் பலத்த உயிரிழப்பு ஏற்பட்டதாக தெரியவருகிறது.

இராணுவத்தினருடன் இடம்பெற்ற கடுமையான மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் எட்டுப் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்

வீரச்சாவு அடைந்த விடுதலைப்புலிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (ரி)

## 2 படையினர் பலி நால்வர் காயம்

(கொழும்பு)
மாதகல் பகுதியில் நேற்றுக் காலை புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் நால்வர் படுகாயம் அடைந்ததாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தின் முன்னணி காவலரண்கள் மீதும புலிகள் திடீர்த் தாக்குதலை மேற்கொண்டபோது பெரும் மோதல் வெடித்ததாகவும் (4ம் பக்கம் பார்க்க)

## மாதகல் படை முகாமிலிருந்து அகோர ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
மாதகலில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்றுக் காலை குடியிருப்பு பகுதிகளை நோக்கி மேற்கொண்ட அகோர ஷெல் தாக்குதலில் பலர் காயமடைந்ததுடன் வீடுகள் பலவும் சேதமடைந்துள்ளன.

காலை 6 மணி முதல் மாதகலிலிருந்து பண்டத்தரிப்பு, சில்லாலை, வடலியடைப்பு, நிற்சாமம், பனிப்புலம், பண்ணாகம் பகுதிகளைநோக்கி மிக மோசமாக படையினர் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர் (4-ம் பக்கம் பார்க்க)

## வீடுகள் தகர்ப்பு

(வட்டுக்கோட்டை)
மாதகலில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அங்குள்ள வீடுகளுக்குப பாரிய குண்டுகளை வைத்து தகர்த்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.
(4ம் பக்கம் பார்க்க)

## ஒப்ரேஷன் பூகம்பம் - II விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)
யாழ் மாவட்டத்தில் 'ஒபரேஷன் பூகம்பம்' இராணுவ நடவடிக்கையின் இரண்டாவது கட்டம் விரைவில் ஆரம்பமாகும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நடவடிக்கை எந்தச் திசையில் ஆரம்பமாகும் என்று அந்த வட்டாரங்கள் கூற மறுத்து விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (சு)

★ சுவிஸிலிருந்து

## 1,50,000 இலங்கை அகதிகளை வெளியேற்ற நடவடிக்கை

(ஜெனிவா)
சுவிஸிலிருந்து 1 லட்சத்து 50,000 இலங்கைத் தமிழ் அகதிகளை வெளியேற்றுவதற்கு சுவிஸ் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்து வருவதாகத் தெரியவருகின்றது.

அகதிகள் ஐந்துவருட காலத்தில் கட்டம் கட்டமாக திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.
(4ம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடை; விசாரணை ஒத்திவைப்பு

(புதுடில்லி)
விடுதலைப் புலிகள் மீதான தடை தொடர்பாக தாக்கலான மனுவை விசாரிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட புதுடில்லி விசேட நீதிமன்றம் விசாரணையை பிற்போட்டுள்ளது.

புலிகள் சார்பில் வாதாட சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகாத காரணத்தினா (4ம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளருக்கு தகுந்த பாதுகாப்பு

(கொழும்பு)
வெகுஜனத் தொடர்பு துறையைச்சேர்ந்தவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்படும் என செய்தியாளர்கள் மாநாட்டில் ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிரடமன் வீரக்கோன் தெரிவித்தார். [4ம் பக்கம் பார்க்க]

## பலாலியிலிருந்த மீனவர்கள் களுத்துறைக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)
பலாலி இராணுவ முகாமில் இதுவரை காலமும் தடுத்து வைக்கப்பட்டிருந்த மீனவர் அனைவரும் களுத்துறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

யாழ் மாவட்டக் கடல் பிராந்தியங்களில் வைத்து இராணுவத்தினராலும், கடற்படையினராலும் கைதுசெய்யப்பட்டு பலாலி இராணுவ முகாமில் இதுவரை காலமும் தடுத்து வைக்கப்பட்டிருந்த (4ம் பக்கம் பார்க்க)

நீரைச் சேமிப்போம்
ஊரைச் செழிக்க வைப்போம்

# வரி விளம்பரம்

### நூல் கண்காட்சியும் விற்பனையும்

ஈழத்து நூல் கண்காட்சியும் விற்பனையும் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சகலவித மான இந்திய, இலங்கை தமிழ், ஆங்கில, சமய, விஞ்ஞான கலை இலக்கிய, சோதிட நூல்களை தெரிவு செய்யுங்கள். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக பருத்தித்துறைவீதி, நல்லூர். (எ2335)

### புதிய வகுப்புகள் (ஆண்டு 5)

ஆண்டு 4 மாணவர்களுக்கு திறமை அடிப்படையில் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டு புலமைப் பரிசில் முன்னோடி வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. ஆண்டு 5 மாணவர்களுக்கு பிரபல பாடசாலைகளுக்கான அனுமதிப் பரீட்சைக்கான முன்னோடி வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (.சி-6727)

### பாலாஜி புத்தகசாலை நல்லை ஆதீனம்

ஈழத்து எழுத்தாளர்களின் நாவல்கள் இந்தியா நாவல்கள் சமய சஞ்சிகைகள் சிறுவர்களுக்கான புத்தகங்கள் மற்றும் பல பாலாஜி புத்தகசாலை, நல்லை ஆதீனம், நல்லூர். (சி-6732)

### English Assistant Teachers

துரித பயிற்சி வகுப்புகள் சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் 10-30 – 12-30 ஆரம்பம்: 29-08-92 விரிவுரையாளர் S சபாநாயகம் School of Business Administration, 16, 3rd Cross St, Jaffna. (C 6741)

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெ கிடைக்குமிடம் எஸ் ரி மெடிக்கல்ஸ், 490. ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். (சி-6669)

### விற்பனையாகின்றது

நாடறிந்த எழுத்தாளர் நவேந்தன் எழுதிய மான வீரன் கும்பகருணன் விலை ரூபா 25/- மற்றும் குழந்தைக் கவிஞர் த. துரைசிங்கம் எழுதிய அனைத்து நூல்களுக்கும் பாலாஜி புத்தகசாலை, நல்லை ஆதீனம். (சி-6731)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் பழுதடைந்துவிட்டனவா? பூமு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். டில்கா வாச் வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி, (பழைய விகாரை முன்பாக) யாழ்ப்பாணம் (சி-6733)

## நூலுருவில் நாவலன் கோவை

(பருத்தித்துறை)

தமிழறிஞர் கந்தமுருகேசனார் எழுதப்பட்ட "நாவலன் கோவை" நூலுருவில் அச்சிடப்படவுள்ளது இதற்கான நடவடிக்கைகளை தென் புலோலி கந்த முருகேசன் மன்று மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (52)

## புதிய ச.ச.நிலையம்

(புலோலி)

மேலைப் புலோலி ஆத்தியடியில் புதிய சனசமூக நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கென திரு இ. உருத்திரா தலைமையில் நிர்வாக குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது. (61)

## காவல் திகதி நீடிப்பு

(சென்னை)

திரு. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 26 பேரின் காவல் அடுத்த மாதம் 9-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு தனிச்சிறைச் சாலையில் நேற்றுமுன் தினம் இந்த விசாரணை நடைபெற்றது

இந்த வழக்கை பகிரங்க நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டுமென்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. (கே)

## கடித்த பாம்பை விழுங்கினர்

(கோலாலம்பூர்)

தன்னைக் கடித்த பாம்பையே ஆத்திரத்தின் நிமித்தம் பிடித்து நபர் ஒருவர் விழுங்கியுள்ளார்

மலேசியாவில் வடக்கு நகரமொன்றில் வசித்த கிருஷ்ணன் என்ற நபர் (45 வயது) பாம்பை விழுங்கி ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளார்.

தற்போது கடுமையான வயிற்றுவலி காரணமாக மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். (கே)

## மானி. அலுவலகத்தில் ஊழியர்கள் சமுகமளிக்க வேண்டுகோள்

(பண்டத்தரிப்பு)

வலி-தென் மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம், பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் ஆகியவற்றில் கடமையாற்றும் சகல ஊழியர்களையும் மானிப்பாயில் செயற்படும் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திற்குச் சமுகமளிக்குமாறு பிரதேச சபையின் செயலாளர் திரு. இ. கணேசவரன் தெரிவித்துள்ளார். (72)

## பாரதி இல்லம் முதலிடம்

(பருத்தித்துறை)

தென் புலோலி சம்பன் சனசமூக நிலைய 17-வது ஆண்டு நிறைவு விழாவிலும், விளையாட்டுப் போட்டியிலும் பாரதி இல்லம் (பச்சை) 263 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், வள்ளுவன் இல்லம் (சிவப்பு) 253 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன

இவ்விளையாட்டுப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் நிலையத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீதரன் தலைமையில் நிலைய மைதானத்தில் நடைபெற்றது. இவ்விழாவை தமிழீழ விடுதலைப் புலிகள் கிராமியப் பொறுப்பாளர் திரு. எழிலன் தேசியக்கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்தார். (52)

## ஆப்கானில் 1800 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நடைபெறும் சண்டையில் வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளும் ஊழியர்களும் பாதிக்கப்பட்டுவருகிறார்கள். இதனால் அங்குள்ள தூதரக அதிகாரிகளில் அதிகமானோர் வெளியேறி வருகின்றனர்.

கடந்த இரு வாரங்களாக அரசுப்படைகளுக்கும்ஹெப்தி அதிருப்தியாளர்களுக்குமிடையில் நடந்துவரும் சண்டையில் ரஷ்ய தூதரக ஊழியர்கள் உட்பட 1800 பேர் பலியாகியுள்ளனர். (கே)

## வட்டுக்கோட்டையில் 46 குடும்பங்கள் தஞ்சம்

(வட்டுக்கோட்டை)

அராலி வெங்காயச் சங்க முகாமில் தஞ்சமடைந்திருந்த அகதிகள் தற்போது வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாலய பிரதம பிரிவில் தங்கியுள்ளனர்.

சுமார் 46 குடும்பத்தினர் இங்கு தங்கியுள்ளனர் இவர்களுக்கு இரண்டு நாட்கள் சங்கானை உதவி அரசாங்க அதிபரினால் உணவு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது (139)

## துர்க்கா தேவி ஆலய பஸ்சேவை

(ஏழாலை)

மல்லாகத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை முன்னர் சேவையாற்றிய மினி பஸ் சேவை துர்க்காதேவி ஆலய உற்சவத்தையொட்டி தற்போது துர்க்கா தேவி கோவில் பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து சேவையாற்றிவருகிறது.

## திருட்டு

(அரியாலை)

இராணுவத்தினரின் நடவடிக்கை காரணமாக கடந்த வாரம் இடம்பெயர்ந்து யாழ் நகரில் தங்கியுள்ள சில்லாலை குடிமக்கள் மீண்டும் தமது வீடுகளுக்கு சென்றபோது பெருமளவு கோழிகள் திருட்டு போயுள்ளதாக தெரியவந்துள்ளது. (59)

## நல்லூர் தெய்வீக இசை அரங்கு

இன்றைய இசைநிகழ்ச்சி
பாட்டு
பொன் சுந்தரலிங்கம்
வயலின்
ஆர். ராதாகிருஷ்ணன்
மிருதங்கம்
எஸ். மகேந்திரன்

## செஞ்சிலுவைச் சங்க தேர்தல்

(யாழ்ப்பாணம்)

செஞ்சிலுவைச்சங்க கோப்பாய் பிரிவுக்கான தேர்தல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இத்தேர்தலில் தலைவர், உப தலைவர், செயலாளர் உட்பட செயற்குழு உறுப்பினர் பதவிக்கு பலத்தபோட்டி ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

## தட்டுப்பாடு நீங்கியது

(பருத்தித்துறை)

பருத்தித்துறைத் தபால் நிலையத்திற்கு முத்திரைகள் வான் கடிதங்கள் வந்துசேர்ந்துள்ளன. ஆதலால் இத்தபால நிலையத்தில் முத்திரைகள். வான் கடிதங்களுக்கு நிலவி வந்த தட்டுப்பாடு நீங்கியுள்ளது. (52)

## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். கிளை, தலைமையகம்

பிரிவு

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

நடைபெறும் இடங்கள்:

எதிர்வரும் 30-08-92 காலை 9-30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்ட இடங்களில் அந்தந்தப் பிரிவிற்குரிய தேர்தல்கள் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| 01. | கரவெட்டி | — கரவெட்டிப் பிரிவுக் காரியாலயம் |
| 02. | பருத்தித்துறை | — வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை |
| 03. | மருதங்கேணி | — யா/செம்பியன்பற்று றோ. க. த. க. பாடசாலை |
| 04. | ஊர்காவற்றுறை | — ஊர்காவற்றுறைப் பிரிவுக் காரியாலயம், தற்காலிகம் |
| 05. | வேலணை | — வேலணைப் பிரிவுக் காரியாலயம் (உயரப்புலம் வீதி, ஆனைக்கோட்டை) |
| 06. | நெடுந்தீவு | — சென்ஜோன்ஸ் அக்கடமி, தனியார் பாடசாலை |
| 07. | யாழ்ப்பாணம் | — யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் |
| 08. | நல்லூர் | — யாழ். செங்குந்த இந்துக்கல்லூரி, பாடசாலை |
| 09. | சாவகச்சேரி | — சாவகச்சேரி றிபேக் கல்லூரி |
| 10. | சண்டிலிப்பாய் | — மானிப்பாய் சோதி வேம்படி த. க. பாடசாலை |
| 11. | தெல்லிப்பளை | — மல்லாகம் மகாவித்தியாலயம் |
| 12 | உடுவில் | — சைவ மகாஜனக் கல்லூரி |
| 13. | கோப்பாய் | — நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி |
| 14. | சங்கானை | — திருஞானசம்பந்தா வித்தியாசாலை. |


மேற்படி கூட்ட அறிவித்தல் நிகழ்ச்சி நிரலுடன் அங்கத்தவர்களுக்கு தனித்தனியே அவ் அவ் செயலாளர்களால் அனுப்பப்பட்டுள்ளது. ஆயினும் தற்போதைய சூழ்நிலையில் குறித்த அறிவித்தல் கிடைக்காவிடினும், இவ் அறிவித்தலை அங்கத்தவர்களும் ஏற்று பிரிவு வருடாந்தக் கூட்டத்திற்கு தவறாது சமுகம் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நன்றி

செஞ்சிலுவைச் சங்க சேவையில்
ச. த கணநாதன்
தலைவருக்காக
(இடைக்கால நிர்வாகம்)

(ஏ-2392)

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வன் செல்லப்பா குலேந்திரன்

(பாபு)

[வண்ணை வைத்தீஸ்வரா உயர்தர வகுப்பு மாணவன் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மாணவ தொண்டர்]

மலர்வ: 25-06-1971 — உதிர்வு: 27-08-1990

திதி: 27-08-1992

இன்றுடன் நீ பிரிந்து இரண்டாண்டு சென்றாலும்-எம்
இதயத்தால் அகலவில்லை – இன்னும்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உம்மை
நித்தலும் நினைந்துருகுவோம் - சொர்க்கதிதில்
சுத்தமாய் உமதாத்மா சுகம்பெற எம்மிதய
சுத்தியுடன் இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

பெற்றோர், சகோதர சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

243, காரைநகர் வீதி, நாவாந்துறை,
யாழ்ப்பாணம். (சி 6743)

## ★ இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் பழைய இடத்திற்கு திரும்ப மாகாண அமைச்சு அறிவிப்பு

(திருகோணமலை)

வடமாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்து பிற மாகாணங்களில் தற்காலிகமாக கடமையாற்றும் சகல தமிழ் ஆசிரியர்களையும் தாங்கள் முன்னர் கடமை புரிந்த பாடசாலைகளுக்குதிரும்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவர்களை செப்டம்பர் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் அவ்வப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வடகிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாண கல்விப்பணிப்பாளர்களுக்கு சுற்றுநிருபம் மூலம் பணித்துள்ளார்.

பழைய இடங்களுக்கு செல்லாத அந்த ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீககப்படுவர் என்றும் அந்தசுற்று நிருபத்தில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் ஆசிரியர்களுக்கு ஆச் சுற்றுநிருபத்திலருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. (கே)

## இன்று செல்வச் சந்நிதி கொடியேற்ற

(யாழ்ப்பாணம்)

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த உற்சவம் இன்று 28ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு கொடியேற்றத்துதுடன் ஆரம்பமாகின்றது.

பூங்காவனம் செப்டம்பர் 05ம் தேதி சனிக்கிழமை பகல் 10 மணிக்கும், சப்பறம் 10ம் தேதி வியாழக்கிழமை மாலையும், ரதோற்சவம் 11ம் தேதி காலையும், தீர்த்தோற்சவம் 12ம்தேதி சனிக்கிழமை காலை7 மணிக்கும், மௌனத திருவிழா 12ம் தேதி மாலையும் நடைபெறும்.

நாட்டுநிலைமை காரணமாக இரவுத் திருவிழாக்கள் மாலை 6 மணிக்கு முடிவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நல்லூர்உற்சவ பண்ணிசைப் போட்டி நாளை பரிசளிப்பு விழா

(நல்லூர்)

நல்லூர்கந்தசுவாமிகோவில் வருடாந்த மகோற்சவத்தினை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகரசபையினால் நடாத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியின் 3 பிரிவுகளிலும் வெற்றி பெற்றவர்கள்விபரம் வருமாறு

கீழ்ப்பிரிவு :

1 இ பிரியதர்சினி [யாழ். சனகரத்தினம்ம ம.வி., 2. கு. தீபா [யாழ். சினன் கலட்டி ஞானோதய வித்தியாசாலை) 3.ஸ்ரீ தாட்சாயினி யாழ்இந்து மகளிர் கல்லூரி] தகைமை பெற்றோர் 7 பேர்.

மத்தியபிரிவு :

1. சி சிவரதி (யாழ் மகாஜனக் கல்லூரி] 2. சோ நளாயனி (யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, 3. த.கீதாதேவி (யாழ் அத்தியார் இந்துக்கல்லூரி)

மேற்பிரிவு:

1.ம. சாந்தசொரூபி(யாழ். இராமநாதன் நுண்கலைக்கழகம்) 2 சி பகீரதன்[யாழ் மகாஜனக் கல்லூரி) ஜ. கமலாம்பிகை (மானிப்பாய்)

தகைமை பெற்றோர் 2 பேர்.

நாளை 29ம் தேதி பிற்பகல் 2 00 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் இவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும் பரிசளிப்பு வைபவத்தின்போது மேற்படி போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெற்றுக்கொண்டோர் அவையினர் முன்னிலையில் பாடுதலாகிய நிகழ்ச்சி இடம்பெறும். (158)

## வாயுக்கசிவு 11 பேர் மரணம்

(புதுடில்லி)

ஹரியானாவிலுள்ள தொழிற்சாலையில் நேற்று முன்தினம் மாலை வாயுக்கசிவு ஒன்று ஏற்பட்டதில் அந்த நிறுவனத்தின் 11 ஊழியர்கள் இறந்துவிட்டார்கள். வேறு 9 பேர் கடுமையாக பாதிக்கப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கொண்டும் விபரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. [கே]

## மக்கள் வங்கியில் ஓய்வூதியம் பெற ஏற்பாடு

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் மேற்கு ஓய்வூதியர்கள் மக்கள் வங்கியில் ஓய்வூதியம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் வலிகாமம் மேற்கு ஓய்வூதியர் நலன்புரிக் கூட்டுறவாளர் சங்கத்தினருக்கு அறிவித்துள்ளார்.

தமது ஓய்வூதியத்தை சங்கானை மக்கள் வங்கியில் பெற்றுக்கொள்ள ஆவன செய்யுமாறு யாழ். அரசாங்க அதிபருக்கு மகஜரொன்றின் மூலம் இவர்கள்வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

சங்கானை ப.நோ.கூ. சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறும்போது ஏற்படுவரும் சிரமங்கள், தாமதங்கள் குறித்து விபரமாக மேற்படி மகஜரில் தெரிவித்திருந்தனர். இதன் பெறுபேறாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (139

## எண்ணெய்க் கப்பல் தடுத்துவைப்பு

(கொழும்பு)

கொலன்னாவையிலுள்ள எரிபொருள் சேமிப்புத்தாங்கிகளுக்கு கலக்கப்பட்ட பெற்றோல் டீசலை விநியோகித்த டேனிஸ் எண்ணெக்கப்பலான 'எம்.வி.பால்மா' கடற்படையால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது இக்கப்பலை விடுவிப்பதற்கு இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம், 40 லட்சம் அமெரிக்க டாலர்களை நஷ்டஈடாகக் கோரியுள்ளது.

இம்மோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் கொலன்னாவையில் எரிபொருள் நிரப்பும் வேலை நிறுத்தப்பட்டுள்ளது. (எஸ்)

## ஒருவார காலத்துக்கு இலவச நிவாரணம்

(சித்தன்கேணி)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பெரும்பாலான குடும்பங்களுக்கு ஒருவாரகாலத்துக்கான இலவச நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

அராலி தெற்கு, அராலி மேற்கு, அராலி மத்திபொன்னாலை ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள குடும்பங்களுக்கும் அராலி கிழக்கின் ஒரு பகுதி மக்களுக்கும், காட்டுப்புலம், பாண்டவெட்டை, சாந்தை, செட்டிகுறிச்சி, வறுத்தோலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கும் அண்மையில்இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்தமைக்காக ஒருவாரகாலத்துக்கு இலவச உலர் உணவு விநியோகிக்கப்படவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் அவ்வப் பிரிவு உத்தியோகத்தர்கள் மூலம் செயலகத் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு எஸ். பாலகிருஷ்ணன் மேற்கொண்டுள்ளார்.

குறிப்பிடப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த சகல குடும்பங்களுக்கும் அரசாங்க,கூட்டுத்தாபன ஓய்வூதியம பெறுகின்ற குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (137 இ)

## விசேட கிளையில் உலர் உணவு விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் இடம்பெயர்ந்த மக்களின் நலன் கருதி மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு சமீபத்தில் உள்ள கட்டிடத்தில் விசேட கிளையொன்று திறந்துள்ளது.

இங்கு உலர்உணவு அட்டைகளை சமர்ப்பிப்போருக்கு ஒருவாரத்திற்கான இலவச உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சங்கானையிலும் விசேட கிளையொன்று திறக்கப்பட்டு நிவாரணப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (72)

## பத்திரிகையாளர் கொலை முயற்சி சந்தேகநபர் கைது

(கொழும்பு)

'அத்த' பத்திரிகையின் கார்ட்டூனிஸ்ட் ஜிப்றி யூனூஸ் என்பவரை கொலை செய்யும் நோக்குடன் அவரது வீட்டிற்கு சென்ற இனந்தெரியாத நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கார்ட்டூனிஸ்ட் ஜிப்றி யூனூஸைகொலை செய்யும் நோககுடனே இந்த நபர் அவரது வீட்டிற்கு சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனது பாதுகாப்பு தொடர்பாக திரு. யூனூஸ் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

ஏற்கனவே இவரை காயப்படுத்தியவரே வீட்டிற்கு கத்தியுடு மீண்டும் சென்றது குறிப்பிடத்தக்கது. (சு-ரி)

## இன்று ஆவணிப் பூரம்

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் ஆவணிப்பூர உற்சவம் இன்று மாலை அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி சிறப்பு நிகழ்ச்சியாக திருமுறைப்பண்ணிசை, பக்திரசகீதங்கள் இடம்பெற்று திருத்தொங்கல் வாகனத்தில் அம்பாள் திருவீதிவலமும்இடம்பெறும். (சி)

## படையினர் சூடு இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வாழைத்தோட்டத்தில் வாழைமரத்திலிருந்து பழக்குலையை நேற்று முன்தினம் வெட்டிக் கொண்டிருந்தவர்மீதுமாதகல் காடாற்புலத்திலிருந்து படையினர் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் வயோதிபர் ஒருவர் பலத்த காயமடைந்தநிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சில்லாலை தெற்கைச் சேர்ந்த பிரஞ்சுப்பிள்ளை மரியநாயகம்[55 வயது] என்பவரே சினைப்பர்தாக்குதலுக்கு இலக்கானவராவர்,

இதேவேளை பண்டத்தரிப்புச் சந்தியில் நேற்றுக்காலை தமது கடைப்பொருட்களை எடுத்துக் கொண்டிருக்கையில் காடற்புலம் ஆஸ்பத்திரியிலிருந்து இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வடலியடைப்பைச் சேர்ந்த கடை உரிமையாளர் மனோகரன் சுதாகரன் என்பவர் படுகாயமடைந்தார்.

இவரை நோக்கி படையினர் சரமாரியாக துப்பாக்கிவேட்டுகளைத் தீர்த்ததாகவும் ஏனையோர் பாதுகாப்பான இடம் நோக்கி தப்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56)

## இராசி பலன்

**28-08-1992**

**வெள்ளிக்கிழமை**

**(தமிழுக்கு ஆவணி 12)**

அமாவாசை மு. ப. 9-08 வரை, மகம் பி. ப. 1-06 வரை, மரணயோகம் இராகு காலம் காலை 10-35 முதல் 12-05 வரை சுபநேரம் காலை 6-05 முதல் 7-35 வரை.

மேடம்: உற்சாகமின்மை, மனகஷ்டம், காரியதாமதம்.

இடபம்; முற்கோபம், வீண் அலைச்சல், கடன்பயம்.

மிதுனம்: தொழில் பரபரப்பு, ஞானிகள் அருளாசி, மகிழ்ச்சி.

கடகம்: குடும்பவிரோதம், கௌரவப்பிரச்சனை, பயம்.

சிங்கம்: குடும்ப ஒற்றுமை, தொழில் உயர்வு, காரிய சித்தி.

கன்னி! விபரீத எண்ணம், பழிவாங்கல், உறவினர் பகை.

துலாம்: தொழில்லபம், இனசன உதவி, புதியமுயற்சி.

விருச்சிகம்; பலப்பரீட்சை, அதிகமுதலீடு. நற்பணி.

தனுசு: முயற்சி தோல்வி, தொழில் எச்சரிக்கை. பணமுடை.

மகரம்: குழந்தை பற்றிய கவலை,மதிப்புக்குறைபு, உடல் உபாதை.

கும்பம்: மனநிறைவு, கல்வி ஞானம், காரிய சித்தி.

மீனம்: மனதூய்மை. உபசரனை, பொருள்வசதி.

— ஜோஸ்யர்

## முகாம்களில் அகதிகள் வரவு அதிகரிப்பு

[சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் நாளுக்கு நாள் அகதிகளின் வரவு அதிகரிக்கின்றது.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைக்கப்பட்டிருக்கும் 12 முகாம்களிலும் இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட மாதகல், இளவாலை, பண்டத்தரிப்பு, சில்லாலை ஆகிய இடங்களில்இருந்து இடம் பெயர்ந்து வருவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. (137 இ]

## மக்கள்குறை தீர்த்தருளும் முருகா

அரும்திறல் சூரனை அடுத்துமே கூறுக்கி
அமரரைக் காத்த முதலே
வருந்துமுன்னன்பர்கள் பக்தர்கள் படும்துயரை
வடிவேல் அறியவிலையோ
பொருந்துபதி நல்லூரில் பெருந்தோகைமயிலேறி
பொன்னூஞ்சலாடிவாராய்
மருந்தாக வந்துமே மக்கள்குறை தீர்த்தருளும்
மயூர அயில் வேல்முருகா

க. அமிர்தலிங்கம்

[இன்று நல்லூர் கந்தசுவாமி கோயில் பூங்காவனம்)

## ★ வடபகுதிக்கு விவசாய உபகரணங்கள் எடுத்துச் செல்ல அனுமதி

(கொழும்பு)

வடக்கில் ராணுவகட்டுப்பாடு இல்லாத பகுதிகளுக்கு விவசாய உபகரணங்களை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நீர் இறைக்கும் இயந்திரங்கள், மண்வெட்டிகள், தெளிகருவிகள் போன்ற விவசாய உபகரணங்களை விவசாய உதவிப் பணிப்பாளர் அல்லது சமநலசேவை உதவிப் பணிப்பாளரது சிபார்சுடன் வவுனியா ராணுவ தலைமையகத்தின் அனுமதியுடன் பெற்று எடுத்துச் செல்ல முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. [கே]

## ★ ஈழ அகதிகள் விவகாரம்

# தடையுத்தரவை எதிர்த்து தமிழக அரசு மேன்முறையீடு

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிகளை தமிழகத்திலிருந்து திருப்பி அனுப்புவதற்கு சென்னை உயர் நீதிமன்றம் விதித்திருந்த இடைக்காலத் தடை உத்தரவை எதிர்த்து தமிழக அரசு மேன் முறையீடு செய்துள்ளது.

தமிழ் அகதிகள் பலவந்தமாக அனுப்பப்படுவதை நிறுத்தக்கோரி பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் திரு ப. நெடுமாறனும் சென்னை உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இதையடுத்து அகதிகளைத் திருப்பி அனுப்புவதை இன்று வரை இடை நிறுத்தி சென்னை உயர்நீதிமன்று தடை உத்தரவு விதித்திருந்தது.

இதை எதிர்த்தே தமிழக அரசு மேன் முறையீடு செய்துள்ளது. (சி)

---

# 3,200 மீனவர்க்கு இலவச மீன்பிடி வலை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட கடல் தொழிலாளர் குடும்பங்களுக்கு மீனபிடி வலைகளைக் கொடுத்து உதவ இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 3,200 மீன்பிடித் தொழிலாளர் குடும்பங்களுக்கு மீன்பிடி வலைகளை வழங்குவதற்கு கொழும்பில் உள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைமைச் செயலகம் கொள்கையளவில் சம்மதம் தெரிவித்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

---

# இடம்பெயர்ந்தோர்க்கு ஒரு வார நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு மேற்குப் பகுதியில் அண்மையில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு மேலும் ஒருவாரம் உலா உணவு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான முடிவு நேற்று யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில் யாழ. செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், கோப்பாய் ஆகிய பகுதிகளில் புதிதாக நிறுவப்பட்ட மொத்தம் 45 அகதிகள் முகாம்களில் தங்க வசதியின்மையால் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் 14 ஆயிரம் குடும்பங்களுக்கும் இந்த இலவச உலர் உணவு விநியோகம் வழங்கப்படவுள்ளது. [வி]

---

# மாதகல், இளவாலையில் 248 பேரை காணவில்லை

(பண்டத்தரிப்பு)

கடந்த 20-ம் திகதி தொடக்கம் இன்றுவரை இளவாலை-மாதகல பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது 248பேர் காணமல் போய்விட்டார்கள் என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் பிரிவு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த இராணுவ நடவடிக்கையின்போது காயப்பட்டவர்கள், மரணமடைந்தவர்கள் பற்றிய விபரங்களை உடனுக்குடன் மானிப்பாய் பிரதான வீதியிலுள்ள மேற்படி அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [72-ரி]

---

# பாடசாலைகளில் அகதிகள்: வகுப்புகள் நடத்துவதில் சிக்கல்

[யாழ்ப்பாணம்]

சங்கானை சண்டிலிப்பாய், மானிப்பாய், உடுவில், கோப்பாய் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் தற்போது பெருமளவில் அகதிகள் தங்கியிருப்பதனால்இம்மாதம் 31-ம் திகதி பாடசாலைகள்மீண்டும் ஆரம்பமாகும்போது இங்கு வகுப்புகளை நடாத்துவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

மேற்படி இடங்களில் உள்ள பாடசாலைகளில் தங்கியிருக்கும் மக்களை வேறு இடங்களுக்கு மாறும்வரை அனேகமாக குறிப்பிட்ட திகதிக்குப் பின்பே இப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்படக்கூடுமென்றும் கூறப்படுகின்றது. (வி)

---

# சிறிமா மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

திருமதி சிறிமாவோவின் குடும்ப ஆட்சி, செய்தி பத்திரிகைகளிலும் அதிகாரத்தை செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சகோதரரான டாக்டர் சிவலி ரத்வத்தயின் கீழ் உள்ள சிங்கள தினசரி பத்திரிகை செய்தி சாரியாலயத்தில் அவர்களின் ஆட்சியே தற்போது நடப்பதாக குறை கூறப்பட்டுள்ளது. (கே)

---

# இராணுவ வன்முறையால் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு நட்டஈடு வழங்க அரசு நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக வீடுகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்குரிய நட்டஈடுகளை வழங்குவதனை இடைநிறுத்தம் செய்து உயிரிழப்புகளுக்கு ஏற்பட்ட நட்ட ஈடுகளை முதலில் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

உயிரிழப்புகளுக்கான கொடுப்பனவுகள் இதுவரை மேற்கொள்ளப்படாமல் இருப்பதனால் இக்கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக உடனடிகளுக்கான நிதிஒதுக்கீட்டிலிருந்து இக்கொடுப்பனவுகளை மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கான நட்டஈடுகள் விரைவில் மேற்கொள்ளப்படுமென்றும் அதற்கான கடமைகளில் செயலக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தப்பணிக்குமாறும் தெரிவிக்கும் கடிதம் யாழ் செயலக புனர்நிர்மாணப் பிரிவுக்குக் கிடைத்துள்ளதாக செயலகவட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. [161-ரி]

---

# சிங்களவர், முஸ்லிம்களுக்கு நிரந்தர காணி உறுதி

(மட்டுநகர்)

மட்டு. கலமுனையை அடுத்துள்ள கடற்கரைப் பிரதேசத்தில் அத்துமீறிக் குடியேறிய 800 சிங்கள முஸ்லிம் குடும்பங்களுக்கு நிரந்தரக் காணி உறுதிகள் வழங்கப்பட்டன.

தமிழ் மீனவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த இப்பிரதேசத்தில் சிங்கள, முஸ்லிம் மீனவர்கள் அண்மையில் தாமே அத்துமீறிக் குடியேறினர்கள்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் வாழ்ந்த இடங்களில் இதேபோன்ற அத்துமீறிக் குடியேறிய சிங்கள, முஸ்லிம்களுக்கு நிரந்தர காணி உறுதிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. (ரி)

---

# கார்த்திகேயனுக்கு ஜனாதிபதி விருது

(புதுடில்லி)

இந்திய புலனாய்வுதுறையின் சிறப்பு புலனாய்வுதுறை தலைவர் திரு. கார்த்திகேயனுக்கு இந்திய ஜனாதிபதி விருது வழங்கப்பட்டது.

இவர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு புலனாய்வுதுறை தலைவராகவும் இருக்கிறார். (சி)

---

# இன்று

[வட்டுக்கோட்டை]

வட்டுக்கோட்டை மேற்கு நொச்சியம்பதி அருள்மிகு விநாயகர் ஆலய பூங்காவனத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. [139]

---

# கிரிக்கெட் 2-வது டெஸ்ட் இன்று ஆரம்பம்

[கொழும்பு]

இலங்கை அணிக்கும் ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 2வதுகிரிக்கெட்டெஸ்ட் போட்டி கேதாராம விளையாட்டரங்கில் இன்று ஆரம்பமாகிறது.

---

### மாதகல்படை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பலமணிநேரம் நடைபெற்ற ஷெல் தாக்குதலால் இப்பகுதி மக்கள் பெருமளவில் வெளியேறி மானிப்பாய். ஆனைக்கோட்டை, நவாலி, உடுவில் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

காலை 10 மணிக்குப்பின் ஓரளவு அமைதி நிலவியதைத் தொடர்ந்து தமது வீடுகளுக்குச் சென்று மக்கள் தளபாடச்சாமான்கள் உட்பட அனைத்து உடமைகளையும் லான்மாஸ்டர், மாட்டு வண்டி சைக்கிள்கள் மூலம் ஏற்றிவந்து தமக்குத் தெரிந்த வீடுகளிலும் உறவினர் வீடுகளிலும் வைத்தவண்ணமிருந்தனர். [72-71-சி]

---

### பத்திரிகையாளருக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வெளிநாட்டுச்செய்தியாளர்களின் பல கேள்விகளுக்கு பதிலளிக்கையில் பிரட்மன் வீரக்கோன் மேலும் கூறியதாவது: முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளைக்கொண்ட சம்பவங்கள் தொடர்பாக வெகுஜனத் தொடர்புத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு பாதுகாப்பு வழங்க, பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றார். [152]

---

### சுவிஸிலிருந்து!

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சுவிஸிலுள்ள இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு சாதகமான சூழ்நிலை இலங்கையில் நிலவுகின்றதா என்பதை கண்டறிய கடந்தமாதம் சுவிஸிலிருந்து கொழும்பு வந்தகுழு ஒன்றினால் ஆராயப்பட்டபின்னரே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

இக்குழுவினர் வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு விஜயம் செய்யாமல் சுவிஸ் திரும்பியது குறிப்பிடத்தக்கது. (சு-ரி)

---

### தொண்டாவுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனிடையில் தொண்டமானின் அரசியல் கொள்கைகளுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யாமல இன ரீதியான சில அரசியல் கட்சிகள் செயல்படுகின்றனர் என்றும்,

மலையகத்தை தொண்டமானுக்கு தாரைவார்த்துக் கொடுப்பது போன்று இனவாதம் பேசுபவர்கள் ஜனநாயக நாட்டில் தமிழ்பேசும் பிரதிநிதிகளுக்கு தகுந்த மரியாதைகள் கொடுக்கப்படுவதில்லை என்று அந்த அரசியல் அவதானிகள் தெரிவித்தாக மேலும் கூறப்படுகிறது. [சு]

---

### கொழும்பில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கட்சிகள் மாபெரும் பேரணி ஒன்றை நடாத்தவுள்ளனர்.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைந்த குழு மேற்கொண்டுள்ளதுடன் பேரணியின் பின் பொதுக்கூட்டம் ஒன்றை நடாத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (சி)

---

### பலாலியிலிருந்து

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மீனவர்களே இவ்வாறு களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக, இவர்களின் விபரங்களை அறியச் செல்லும உறவினர்களிடம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் தெரிவித்து வருவதாக கூறப்படுகிறது. (வி)

---

### வீடுகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கடந்த சில தினங்களாக மூன்று பாரிய குண்டுகளை வைத்து வீடுகளைத் தகர்க்கும் சத்தம் கேட்டவண்ணமுள்ளது வீடுகளைவிட்டு வெளியேறிய பொதுமக்களின் வீடுகளைதகர்க்கப்பட்டுவருவதாக கூறப்படுகிறது.

வசதி படைத்தவர்களது பெரிய வீடுகளில் உள்ள பெறுமதி வாய்ந்த வெளிநாட்டு உள்நாட்டுப் பொருள்களையெல்லாம் வாகனங்களில் ஏற்றிய பின்னரே குண்டுவைத்துத் தகர்ப்பதாகச் சொல்லப்படுகிறது (139)

---

# கோஷ்டி மோதல் பாடசாலை தீமூட்டி எரிப்பு

[வட்டுக்கோட்டை]

கோஷ்டிமோதல் காரணமாக அராலி பகுதியிலுள்ள அகதிமுகாம் ஒன்றிலிருந்த பாலர் பாடசாலை தீக்கிரையாக்கப்பட்டதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

காரைநகரில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இடம்பெயர்ந்து வந்த குடும்பங்கள் சில அராலி வள்ளியம்மை வித்தியாலய அகதிமுகாமில் தஞ்சமடைந்தனர்,

இம்முகாமிலிருந்த இளைஞர் ஒருவருக்கும் அராலி பெண்ணுக்கும் இடையில ஏற்பட்ட தொடர்பை அடுத்து முகாமிலுள்ளவர்களுக்கும் அராலி மக்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது.

இம்மோதலினால் பலர் காயமடைந்துள்ளதுடன் முகாமிலிருந்த பாலர் பாடசாலையும் தீமூட்டி எரிக்கப்பட்டது. (139)

---

# உடமைகளை மீட்க முயற்சி

(ஏழாலை)

இராணுவ நடவடிக்கையால் உடுத்த உடைபோடு இடம் பெயர்ந்த அளவெட்டி வடக்குபகுதி மக்கள் தங்கள் உடமைகளையும் ஆவணங்களையும் மீட்டெடுக்கும் நோக்குடன் யாழ். அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றினை சமர்ப்பிக்க உள்ளனர். [162]

---

### புலிகள் - தொண்டமானின்

1-ம் பக்கத் தொடர்ச்சி]

கருணரத்ன 'திவயின' பத்திரிகைக்கு தெரிவத்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: தொண்டமானின் அரசியல் நடவடிக்கைகளிலும், புலிகளின் சமதன்மை நிறைய உண்டு. இறுதியில் அவர்கள் இருவரினதும் குறிக்கோள் ஓரிடத்தில் குவிந்துள்ளது.

கள்ளத் தோணியாக நாட்டிற்கு வந்தவர்கள் நாட்டின சக்திவாய்ந்த பிரஜைகளாக உருவாகியுள்ளனர் என்றார். (சி)

---

### 2 படையினர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இம்மோதல் சிலமணிநேரம் நீடித்ததாகவும் செய்திகள் தெரிவித்தன. [சி]

---

### புலிகள்

1ம் பக்கத் தொடர்ச்சி)

லேயே இந்த விசாரணை பிற்போடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (கே-சி)

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி ஈழநாடு அலுவலகத்தில் அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/1